1979 ஏப்ரல் 5] (திரு. கூத்தகுடி ச. சண்முகம்)

கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் சுடப் பட்டு செத்தபிறகு 5,000 ரூபாய் தருவோம் என்று அறிவிக்கப் பட்ட அந்தப் பிச்சைக் காசு அந்த விவசாயிகளுக்கு வேண்டாம். இந்த அறிவிப்பு விவசாயிகளைக் கேவலப்படுத்துகிற அறிவிப் பாக வந்திருக்கிறது. சுடப்பட்டு செத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் பணம் தருகிறோம் என்று மமதையில் அறிவிக்கும் அறிவிப்பாக வந்திருக்கிறது என்று ஆத்திரத்தோடு நான் கூறுகிறேன். ஒரு பகுதிக்குத் தண்ணீர் வேண்டுமென்றால் கொடுக்கப்பட வேண்டுமென்பதில் ஆட்சேபணை இல்லை. இதை எப்படிக் களைய வேண்டுமென்று யோசிப்பதற்குப் பதி லாக துப்பாக்கியால் களைவோம் என்று சொல்வது இந்த அரசுக்கும் நல்லதல்ல. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தாங்கள் இங்கே குறிப்பிடும்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கு அன்று அவையின் முன்னவராக இருந்த நாவலர் அவர்கள் நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார் என்று சுட்டிக்காட்டினீர்கள். அதற்குப் பிறகு 26 ஆம் தேதி என்று கருதுகிறேன் — அந்தச் சம்பவத்தைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டு இந்த மன்றத்திலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை — நேற்றைய தினம் அருப்புக்கோட்டைக்கு அருகாமையிலுள்ள வாகைக்குளம் என்ற ஊரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றியதாகும். அந்த வாகைக்குளம் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வாகைக்குளம், பூலாங்காடு, கீழ்குடி கள்ளிகாதி ஆகிய இந்தப் பகுதிகள் அடங்கிய இடத்திலே வாழ்கிற விவசாய பெருங்குடி மக்கள் மிக முக்கியமாக கரும்பு, துவரை, மிளகாய் ஆகிய பொருள்களை அங்கே உற்பத்தி செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரின் வாயிலாக வளம் பெற்றுள்ள இடமாகும். நான் குறிப்பிட்டுள்ள இந்த இடங்கள் முப்போக விளைச்சல். அது மாத்திரமல்ல ; அங்கு விளைவிக்கப்படுகின்ற துவரை, மிளகாய் போன்ற பொருள் களை கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களுக்கு அனுப்பி அங்கிருந்து அவை ஏற்றுமதியாகின்றன என்று சொல்லும் அள வுக்கு அந்தத் திட்டு போன்ற பகுதி வளம் கொழிக்கின்ற பகுதி யாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து கடலாடிக்குத் குடிதண்ணீர் திட்டம் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று கடந்த ஆண்டில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வாகைகுளத்திலிருந்து 35 மைல் தூரத்திலுள்ள கடலாடிக்குப்

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைக் கொண்டு செல்ல முயற்சிகள் நடைபெற்றன. அப்போதே அங்குள்ள விவசாயிகள் நிலத்தடி நீர் இங்கிருந்து குடி தண்ணீராக மாற்றப்பட்டு அகற்றப்படுமானால் இங்கே ஊற்றுக்கண்கள் அடைபட்டுவிடும், இந்தப் பகுதியில் நாங்கள் வளமாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறோம், அதை கெடுத்து விடாதீர்கள் என்று முறையீடு செய்தார்கள்.

[முற்பகல் 10-20]

ஆனால் அந்த முறையீடு அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கடலாடிக்குக் குடிதண்ணீர் கொடுக்கவேண்டாமா அது முக்கியமான பிரச்சினையல்லவா. அது நியாயமான கேள்விதான். அதை திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே ஆராய்ந்து பார்த்து, மலட்டாறு என்கிற ஒரு ஆறு, அதற்கு மலட்டாறு என்று பெயர் வந்ததற்குக் காரணம், அதனுடைய தண்ணீர் அனைத்துமே பக்கத்திலே உள்ள வங்க கடலிலே போய் வீணாகி விழுந்து விடுகிறது என்ற காரணத்தால்தான் அந்தப் பெயர் வந்தது என்று அந்தப் பகுதியிலே சொல்வார்கள். அதற்கும் கடலாடிக்கும் 5 மைல் தொலைவுதான் இருக்கிறது. மலட்டாற்றிலிருந்து கடலாடிக்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை கழக ஆட்சி பரிசீலித்துக் கொண்டிருந்தது. அதற்கிடையில் கழக அரசு கவிழ்க்கப்பட்டது. ஆகவே அந்தத் திட்டம் என்ன ஆயிற்று, இந்தப் புதிய திட்டம் ஏன் உருவாயிற்று என்பது எல்லாம் புரியாத புதிர்களாகவே இருக்கின்றன.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல், நேற்று மாத்திரமல்ல, தொடங்கப்பட்ட, அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் விவசாயிகளுடைய ஏகோபித்த எதிர்ப்பு அந்த நான்கு பகுதிகளிலிருந்து கிளம்பிக் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம் கடந்த 7, 8 நாட்களாக தொடர்ந்து நடைபெற்ற சம்பவத்தினுடைய முடிவுரை என்று சொன்னால் மிகையாகாது. தினத்தந்திப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. கடந்த 28ஆம் தேதி ஆழ்கிணறு தோண்டும் வேலை நடந்தது. ஆனால் விவசாயிகள் செய்த எச்சரிக்கையின் காரணமாக யாரும் வேலைக்கு வரவில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதே பத்திரிகையிலே, நான்கு நாட்களுக்கு முன்பு

''மதுரை மாவட்டம் செம்பட்டியிலிருந்து கான்ட்ராக்ட்டர் வேலைக்கு ஆள் சென்றார்கள். இதை 1,500 விவசாயிகள் எதிர்த்தார்கள். வெளியாட்கள் வேலை பார்க்காமல் திரும்பிப்

**1979** ஏப்ரல் 5] [திரு. மு. கருணாநிதி]

போனார்கள். உதவி கலெக்டரும் உதவி போலீஸ் சூப்பிரண்டெண்டெண்டும் சென்று, விவசாயிகளை கலைந்து செல்லும்படி சொல்லியும் மறுத்ததால் அன்று தடியடி நடந்தது ''.

என்று தினத்தந்தி ஏடு கூறுகிறது. அதற்குப் பிறகு நண்பர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் விவசாயிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைக்கு செவி சாய்த்து இந்த அரசு ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கலாம். அதற்கு மாறாக 3 பேர்கள் சாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த மூன்று பேர்களில் ஒருவர் அரசு என்பவர் சுடப்பட்டு செத்து இருக்கிறார். இந்த அரசு, 6, 7, மாதங்களுக்கு முன்பு இதே ஆழ் கிணறு தோண்டுகிற திட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்த காரணத்தால் போலீஸ் அவரைப் பிடித்து அங்குள்ள பம்புசெட்டு அறையிலே பூட்டி அவரை நையப் புடைத்து நொறுக்கியது மட்டுமல்ல, அவருக்குச் சொந்தமான ஆடுமாடுகளை கிணற்றிலே தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இதை அறிந்து மாவட்ட போலீஸ் அதிகாரி உடனே அதுபற்றி விசாரணை செய்து டி.ஒய். எஸ்.பி.யையும் தாக்கியதற்குக் காரணமாக இருந்த போலீஸ் காரரையும் சஸ்பெண்ட் செய்தார்கள் என்ற செய்திகள் வந்தன. அதற்குப் பிறகு நேற்று நடந்த சம்பவத்தில் அதே அரசு கிளர்ச்சி நடைபெற்ற இடத்திலே அல்ல ஓட ஓடத் துரத்தப்பட்டு ஊருக்குள்ளே சுடப்பட்டு செத்திருக்கிறார். அரசு சுடப்பட்டு செத்தார். அதே இடத்திலே முத்துவேலு அம்மாள் என்கின்ற ஒரு தாயும்-பத்திரிகையில் வந்த வயதுக் கணக்கு 50 என்று குறிப்பிட்டிருந்தாலும்-எனக்குக் காலையிலே கிடைத்த தகவலின்படி அந்த அம்மையாருடைய வயது 30, 40 இருக்கும் என்று கூறினார்கள். சர்க்கரை என்பவரும் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். விவசாயச் சங்கத் தலைவர் புலி உடையார்த் தேவர் என்பவர் எனக்கு அனுப்பியிருக்கிற தந்தியின்படி 10 பேர்கள் சுடப்பட்டு செத்திருக்கிறார்கள் என்று கொடுத்திருக்கிறார்கள். படுகாயமுற்ற 17 பேர்களுக்கு கமுதி, அருப்புக்கோட்டை மருத்துவ மனைகளிலே சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கமுதியிலும், அருப்புக்கோட்டையிலும் உள்ள மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிப்பதற்குப் போதுமான வசதிகள் இல்லை என்று தெரிந்தும்கூட அங்கேயே காயமுற்றவர்களை வைத்திருப்பது சரியல்ல. அவர்கள் மதுரை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே அருப்புக்கோட்டையிலே உள்ள தாசில்தார், அந்தப் பகுதியிலே போலீசார் தலையிட்டு, பம்பு செட்டுக்களை உடைத்து, அதன்காரணமாக 64,000 ரூபாய் நஷ்டம் அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று தாசில்தார் குறிப்பெழுதி

னார், அதன் விளைவு, தாசில்தார் மாற்றப்பட்டாரே தவிர, 64,000 ரூபாய் நஷ்டயீடு அந்த பம்பு செட்டை இழந்தவர் களுக்குக் கிடைக்கவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

விசாரணைக் கமிஷன் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நேற்றைக்கு, 5,000 ரூபாய் அந்தக் குடும்பங்களுக்குத் தரப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் வைத் திருப்பது சுட்டது சரியா அல்லவா என்பதை ஆராய்வதற்காக மாத்திரம், ஆராய்ந்து தீர்ப்பு கூறுவதற்காக மாத்திரம் என்று இருந்தால் பயனில்லை. இதற்குரிய சூழ்நிலைகள் எப்படி வளர்ந்தன, அதை வளரவிட்டதற்குக் காரணமாக இருந்த காரண கர்த்தா யார் என்பதையும் ஆராய்கின்ற வகையில் இந்த விசா ரணைக் கமிஷன் அமைய வேண்டும்.

நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக நண்பர் சிவசாமி அவர்கள் போட்டியிட்டு, நம்முடைய முதலமைச்சருக்கு அடுத்தபடியாக வாக்குகளை அங்கே பெற்ற வர்கள். அவருக்கு ஏராளமான வாக்குகள் விழுந்த இடம் பூலாங்கால், கீழக்குடி, கள்ளக்குறி, வாகைக்குளம் ஆகிய பகுதிகள். இந்திரா காங்கிரசைச் சேர்ந்த அவர்களுக்குப் பெரும் பான்மையான வாக்குகள் ஏராளமாக விழுந்த இடம். எனவே, திட்டமிட்டே அந்தப் பகுதியிலே அவர்களுக்கு வாக்களித்த மக்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்ற உணர்ச்சியும் இன்றைக்கு அங்கே ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், உரையாற்றுகின்றபொழுது கடந்த சட்டமன்றத் தேர்தலிலே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக நம்முடைய முதலமைச்சரவர்களை அந்தத் தொகுதியிலே எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு முதலமைச்சர் பெற்ற வாக்கு களுக்கு அடுத்த எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தன என்ப தையும், பெரும்பகுதி வாக்குகள் சில கிராமங்களிலிருந்து கிடைத் தன என்றும் சொல்கிறார்கள். இப்பொழுது இருக்கும் புதிய ஓட்டு எண்ணிக்கை முறைப்படி, எந்த கிராமத்தில் யாருக்கு, எவ்வளவு அதிகமாக வாக்குகள் விழுந்தன என்று யாரும் எடுத்துச் சொல்ல முடியாது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர வர்கள் அதைப்பற்றிச் சொல்லாமல் இருப்பது நல்லது. அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பதும் நல்லது.

1979 ஏப்ரல் 5]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, பிரச்சாரம் செய்கிற நேரத்திலும், மக்கள் தங்களுடைய ஆதரவை இன்னாருக்கு அளிக்கிறோம் என்று சொல்லும் நேரத்திலும், சுலபமாக அவைகளை உணர்ந்து கொள்ள முடியும் என்பதை தேர்தலில் அடிக்கடி நின்று பழக்கப்பட்ட நம்முடைய அமைச்சர் எட்மண்ட் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

எனவே, வீணாக—நல்லமுறையிலே ஒரு திட்டம்—மலட்டாற்றிலிருந்து 5 மைல் தொலைவில் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை இருக்கும்பொழுது, விவசாயிகள் ஓராண்டுக் காலமாகத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டு வந்தும், நிறைவேற்றியே தீருவோம் என்று பிடிவாதம் காட்டியதன் காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது.

எனவே வைக்கப்பட்டிருக்கின்ற விசாரணை, துப்பாக்கிச் சூடு சரியா, அல்லவா என்பதற்காக மாத்திரம் அல்லாமல், இதற்கான சூழ்நிலைகளையும் ஆராய்கின்ற வகையிலே அந்த நீதிபதிக்கு இப்படிப்பட்ட குறிப்புகளையும் த வேண்டும். இல்லாவிட்டால் இந்த நீதி விசாரணை ஏதோ ஒரு நாடகமாகத்தான் முடிந்து விடும் என்பதையும் நான் தெரிவித்து, இதுபற்றி விரிவாகப் பேச வேண்டியிருக்கின்ற காரணத்தினால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச தாங்கள் அனுமதி வ'ங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது குறுக்கிடாமல் இருக்க வேண்டுமென்றுதான் நினைத்தேன். வீராணம் திட்டம்கூட அப்படித்தான் கொண்டு வரப்பட்டது. சிதம்பரம், பகுதியிலே இருந்த விவசாயிகள் அது கூடாது என்று அப்பொழுது சொன்னார்கள், வீராணம் திட்டம் கொண்டு வந்தது, அப்பொழுது சிதம்பரம் மக்கள் ஓட்டுப்போடவில்லை என்பதற்காகக் கொண்டு வரப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : விவசாயிகள் சொன்னார்கள், அவர்களை அணுக வேண்டிய முறையிலே அணுகி, அந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்கும்படியாகச் செய்து விட்டோம். சுட்டுகொன்று அவர்களை நாங்கள் பழி தீர்த்துக் கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இங்கேயும் அணுகப்பட்டது. முன்னவரவர்கள் பதிலிலே விளக்கம் தருவார்கள்.